# ஒட்டாவா சிவன் கோயில்

## லிங்காஷ்டகம்

ப்ரஹ்மமுராரி ஸுரார்சித லிங்கம்
நிர்மலபாஸித சோபித லிங்கம்
ஜன்மஜ து:்க வினாசக லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (1)

தேவமுனி ப்ரவரார்சித லிங்கம்
காமதஹன கருணாகர லிங்கம்
ராவண தர்ப வினாசன லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (2)

சர்வ ஸுகம்த ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வம்தித லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (3)

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயஜ்ஞ வினாசன லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (4)

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப வினாசன லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (5)

# பிரதோஷ விரத தோத்திரப் பாடல்கள்

## லிங்காஷ்டகம் (தொடர்ச்சி)

தேவகணார்சித ஸேவித லிங்கம்
பாவை-ர்பக்தி பிரேவ ச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (6)

அஷ்டதளோபரிவேஷ்டித லிங்கம்
ஸர்வஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்டதரித்ர வினாசன லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (7)

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (8)

லிங்காஷ்டகமிதம் புண்யம்
ய:். படேச்சிவ ஸன்னிதௌ
சிவலோக மவாப்னோதி
சிவேன ஸஹ மோததே (9)

சிவாய நம ஓம் சிவாய நமஹ
சிவாய நம ஓம் நமச்சிவாய
சிவ சிவ சிவ சிவ சிவாய நம ஓம
ஹர ஹர ஹர ஹர நமச்சிவாய! (10)

# ஓட்டாவா சிவன் கோயில்



## நந்திதேவர் துதி

நந்திஎம் பெருமான்தன்னை நாள்தோறும் வழிப்பட்டால்
புந்தியில் ஞானம் சேரும் புகழ்கல்வி தேடிவரும்
இவ்வுலக இன்பம்யாவும் இவரடி தொழ உண்டு!
அவ்வுலக அருளும்கூட அவர்துதி பாட உண்டு! (1)

முற்பிறவி வினைகள்யாவும் தீயிட்ட மெழுகாகும்
நந்தியின் பார்வை பட நலங்கள்உடன் கிட்டும்!
ஈசனுக்கு எதிர் அமர்ந்து இறைஊஞ்சல் ஆட்டுவிக்கும்
நந்தீசர் நற்பாதம் நாம் தொழுவோமே! (2)

சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி
சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி
கவலைகளை எந்நாளும் போக்கும் நந்தி
கைலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி (3)

பள்ளியறைப் பக்கத்தில் இருக்கும் நந்தி
பார்வதியின் சொல்கேட்டுச் சிரிக்கும் நந்தி
நல்லதொரு ரகசியத்தைக் காக்கும் நந்தி
நாள்தோறும் தண்ணீரில் குளிக்கும் நந்தி (4)

# பிரதோஷ விரத தோத்திரப் பாடல்கள்

செங்கரும்பு உணவு மாலை அணியும் நந்தி
சிவனுக்கே உறுதுணையாய் விளங்கும் நந்தி
மங்களங்கள் அனைத்தையும் கொடுக்கும் நந்தி
மனிதர்களின் துயர் போக்க வந்த நந்தி (5)

அருகம்புல் மாலையையும் அணியும் நந்தி
அரியதொரு வில்வமே ஏற்ற நந்தி
வரும் காலம் நலமாக வைக்கும் நந்தி
வணங்குகிறோம் எமைக்காக்க வருக நந்தி (6)

பிரதோஷ காலத்தில் பேசும் நந்தி
பேரருளை மாந்தருக்கு வழங்கும் நந்தி
வரலாறு படைத்து வரும் வல்ல நந்தி
வறுமையினை எந்நாளும் அகற்றும் நந்தி (7)

கெட்டகனா அத்தனையும் மாற்றும் நந்தி
கீர்த்தியுடன் குலம் காக்கும் இனிய நந்தி
வெற்றிவரும் வாய்ப்பளிக்க உதவும் நந்தி
விதியினைத்தான் மாற்றிவிட விளையும் நந்தி (8)

வேந்தன் நகர் செய்யினிலே குளிக்கும் நந்தி
வியக்க வைக்கும் தஞ்சாவூர்ப் பெரிய நந்தி
சேர்ந்த திருப்புன்கூரிலே சாய்ந்த நந்தி
செவி சாய்த்து அருள் கொடுக்கும் செல்வ நந்தி (9)

கும்பிட்ட பக்தர் துயர் நீக்கும் நந்தி
குடம் குடமாய் அபிஷேகம் பார்த்த நந்தி
பொன் பொருளை வழங்கிடவே வந்த நந்தி
புகழ்குவிக்க எம் இல்லம் வருக நந்தி. (10)